சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.45/2024</u>

17.04.2026

வா.சா.1 திரு. தெட்சிணாமூர்த்தி, த/பெ. கணேசன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தற்போது எந்த தொழிலும் செய்யவில்லை. கிராம நிர்வாக அலுவலராக இருந்து 2007 ஆம் வருடம் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் நீதிமன்றங்களில் பல வழக்குகளில் சாட்சியமளித்துள்ளேன் என்றால்சரிதான். எனக்கு நீதிமன்ற நடவடிக்கைகள் நன்கு தெரியும் என்றால் சரிதான். 10.05.2021 ல் என் கைவசம் ரூ.2,00,000/- இருந்தது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ரூ.20,000/-த்திற்கு மேல் ரொக்கமாக ஒருவர் மற்றொருவருக்கு கொடுக்கக்கூடாது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு விவரம் நன்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு என்னை யாரென்றே தெரியாது என்றாலும் நான் சொல்லியுள்து போல் 10.05.2021ல் பிரதிவாதி கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும் சரியல்ல, 40 வருடங்களாக பிரதிவாதியை எனக்கு தெரியும். வா.சா.ஆ.1 கடனுறுதிசீட்டில் உள்ள கையெழுத்து பிரதிவாதியினுடையது அல்ல என்றால்சரியல்ல, அவருடையதுதான். பிராதில் பிரதிவாதி என் வீட்டில் வைத்து கடன் வாங்கியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கடனுறுதிசீட்டில் எனது உறவினர் ஸ்ரீதேவி என்பவர் சாட்சி கையெழுத்தும் கண்ணபிரான் கடனுறுதிசீட்டை எழுதியவர் என்ற இடத்திலும் கையொப்பம் போட்டுள்ளார்கள். வா.சா.ஆ.1 ஆவணத்தை நான் எனக்கு வேண்டியவர்களை வைத்து தயார் செய்துள்ளேன் என்றாலும் அதிலுள்ள கையெழுத்து பிரதிவாதியுடையது அல்ல என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு சொந்த ஊர் தெரியாது. 40 வருடங்களாக திருவாரூர் டவுனில் உள்ளார். தாவா கடனுறுதிசீட்டிற்கு மறுபயன் ஏற்படவில்லை என்பதாலும் தாவாவிற்கு

வழக்குமூலம் இல்லை என்பதாலும் தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டை கைரேகை நிபுணருக்கு அனுப்பலாமா என்றால் அனுப்பலாம். பிரதிவாதி எனது நண்பர் என்று வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.